செய்தி வெளியீடு எண்.852 நாள்.17.11.2009

## பத்திரிக்கைச் செய்தி

17.11.2009 நாளிட்ட தினமணி நாளிதழில் "5500 கார்டுகளுக்கு ஒரே ரேசன் கடை பொருட்களை வழங்க முடியாமல் மக்கள் தவிப்பு " என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக கீழ்க்கண்ட விவரங்கள் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அம்பத்தூர் மண்டல பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் நடத்தப்படும் நெற்குன்றம் கடை எண் 3ல் (FA031) தற்சமயம் 5101 குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. இக்கடையிலிருந்து 2192 குடும்ப அட்டைகளைப் பிரித்து பிளாட் எண் 223, 11வது தெரு, துரைசாமி நகர், நெற்குன்றம் என்ற இடத்தில் புதிய முழு நேர நியாய விலைக் கடை திறக்க ஏற்கனவே அனுமதி அளித்து துணை ஆணையாளர் (ந) வடக்கு நடவடிக்கைகள் என்2/6187/08, நாள் 02.01.2009ல் ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் மேற்காணும் முகவரியில் உள்ள கட்டிட உரிமையாளர் பொது விநியோக அங்காடி நடத்துவதற்கு வாடகைக்கு விட விருப்பம் தெரிவிக்கவில்லை என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு) தெரிவித்து விட்டதால் மேற்கூறிய முகவரியில் புதிய நியாயவிலைக் கடை திறக்க இயலவில்லை. தற்சமயம் நெற்குன்றம் முதல் நிலை ஊராட்சிக்கு உட்பட்ட சி.டி.என் நகரில் ஊராட்சி மூலம் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் 1377 குடும்ப அட்டைகளுடன் இரண்டாவது புதிய நியாயவிலைக் கடை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்கூறிய நெற்குன்றம் கடை எண் 3ல் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளிலிருந்து 1495 குடும்ப அட்டைகளைப் பிரித்து மூன்றாவது புதிய கடையை கதவு எண் 2, ஆவணித் தெரு, நெற்குன்றம் பகுதியில் மேலும் ஒரு புதிய நியாய விலைக் கடை திறக்கவும் இன்று துணை ஆணையரால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு நவம்பர் 30க்குள் இரண்டு புதிய கடைகளையும் திறக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) க. ராஜாராமன்
ஆணையாளர்

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9